நகரமன்றம் குடியாத்தம் நாள் : 16.07.2018

# அறிவிப்பு

2018–ம் ஆண்டு ஜுலை மாதம் 16–ம் தேதி திங்கட்க் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் அவரசக் கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.ச.செல்வபாலாஜி, பி.இ., தனி அலுவலர்**

## நிகழ்ச்சி நிரல்

1. குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் குடிநீர் இணைப்பு இல்லாத வீடுகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு காலதாமதமின்றி வழங்குவதற்கு மதிப்பீடு ரூ.218.00 இலட்சத்திற்கு, நகராட்சி நிர்வாக ஆணயைர், சென்னை அவர்களின் கடித எண்.13277/2018/WS1 நாள்: 03.07.2018-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மொத்தம் உள்ள 20510 வரி விதிப்புகள் தற்போது 9695 குடிநீர் இணைப்புகள் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 6550 வரி விதிப்புதாரருக்கு புதியதாக குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும்.

நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து தொழில் நுட்ப அனுமதி பெற இருப்பதற்கு 2018-2019-ம் ஆண்டு TWAD விலை விகிதப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் ரூ.225.00 இலட்சம் ஆகும். வித்தியாசத்தொகை ரூ.7.00 இலட்சம் என்பது மதிப்பீட்டுத் தொகையினை விட 3.20% அதிகமாக உள்ளதாலும், 10% விட குறைவாக உள்ளதாலும், பணியின் அவசியம் கருதி ரூ.7.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நிர்வாக அனுமதி அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.218.00 இலட்சம் போக கூடுதலாக ஆகும் தொகை ரூ.7.00 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து ஈடுசெய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ2/8806/2008

**ஆணையாளர் / தனி அலுவலர்,**
**குடியாத்தம் நகராட்சி.**

நகரமன்றம் குடியாத்தம் நாள் : 25.07.2018

# அறிவிப்பு

2018–ம் ஆண்டு ஜுலை மாதம் 25–ம் தேதி புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.ச.செல்வபாலாஜி, பி.இ., தனி அலுவலர்**

## நிகழ்ச்சி நிரல்

**1.** வேலூார் மண்டலத்தில் உள்ள குடியாத்தம் நகராட்சியில் வசிக்கும் 95508 பொதுமக்களுக்கு நகராட்சியில் நாள்தோறும் 85.95 இலட்சம் குடிநீர் இரண்டு தினங்களுக்கு ஒருமுறை வீதம் , நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் தண்ணீர் கீழ்க்கண்ட நீராதாரங்களின் அடிப்படையில் பெறப்பட்டு வழங்கப்படுவதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நீராதார இருப்பிடம் | மேல்நிலைத் தொட்டி அமைவிடம் | மேல்நிலைத் தொட்டி கொள்ளளவு (ல.லி) | குடிநீர் விநியோகிக்கப்படும் தண்ணீர் மற்றும் கால அளவு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 0 | 5 |
| 1 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | சித்தூர் கேட் | 10.00 | 90 லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம் |
| 2 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | செதுக்கரை | 10.00 | 90 லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம் |
| 3 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | சந்தப்பேட்டை (புதியது) | 4.00 | 90 லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம் |
| 4 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | சந்தப்பேட்டை (பழைய) | 5.70 | 90 லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம் |
| 5 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | ஆணையர் குடியிருப்பு | 3.80 | 90 லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம் |
| 6 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | ஆர்.எஸ்.ரோடு நகராட்சி மேல்நிலைப் பள்ளி | 2.30 | 90 லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம் |
| 7 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | போடிப்பேட்டை | 4.00 | 90 லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம் |
| 8 | காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பாலாறு | கோபலாபுரம் | 2.70 | 90 லிட்டர் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம் |
| மொத்தம் | | | 42.50 | |

மேலும் குடியாத்தம் நகராட்சியில் மொத்தமுள்ள 95508 பொதுமக்களுக்கு 85.95 இலட்சம் மொத்தம் வழங்கப்படும் தண்ணீரின் அளவு 20510 சொத்து வரிவிதிப்புதாரர்களில் 9578 எண்கள் குடியிருப்புகளுக்கும் 117 எண்கள் வணிக உபயோகத்திற்கு வீட்டிணைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் விநியோகத்தினை Flow Control Valve மற்றும் Metering System-த்தின் அடிப்படையில் நகராட்சி மூலம் Uniform Water Supply Distribution செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 6958 எண்கள் சொத்துவரி குடியிருப்புகளுக்கும், 3806 வணிக உபயோக கட்டிடங்களுக்கும் மற்றும் 51 எண்கள் தொழிற்சாலை குடிநீர் இணைப்புகள் 6550 எண்கள் வழங்கும் பணிக்கு டுபிட்கோ நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக ரூ.218.00 இலட்சம் பணியினை மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையர்,சென்னை –5 அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க. எண்.13277/2018/WS1 நாள்.03.07.2018–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித ந.க. எண். 13277/2017/குவ1, நாள்: 09.07.2018 தேதிய கடிதத்தில் 29.06.2018 ஆம் தேதியில் நடைபெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் பொதுமக்களுக்கு 24 x 7 அடிப்படையில் சீரான குடிநீர் விநியோகம் உரிய அழுத்தத்தில் கடைமடைப்பகுதியில்

உள்ளவர்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், இதற்கான நீராதாரங்கள் சரியான முறையில் District Metering Area (D M A) –ன்படி வழக்கத்தினை குடியாத்தம் நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

நிர்வாக அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து தொழில் நுட்ப அனுமதி பெற இருப்பதற்கு 2018–2019–ம் ஆண்டு TWAD விலை விகிதப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் ரூ.225.00 இலட்சம் ஆகும். வித்தியாசத்தொகையான ரூ.7.00 இலட்சம் என்பது மதிப்பீட்டுத் தொகையினை விட 3.20% அதிகமாக உள்ளதாலும், 10% விட குறைவாக உள்ளதாலும், பணியின் அவசியம் கருதி ரூ.7.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஏற்கனவே, TWIC கலந்தாலோசகர் மூலம் மாதிரிதிட்ட அறிக்கையுடன் தற்போதுள்ள நடைமுறையினை மாற்றி அமைத்து District Metering Area தனியார் கலந்தாலோசகரை உரிய வழிக்காட்டுதலின் படி நியமித்து TNUIFSL நிதி நிறுவன Project Development Grant Fund (PDGF ) or Project Preparatory Fund (PPF) மூலம் Zonation activities பணிகளை மேற்கண்ட நிதியின் கீழ் குடியாத்தம் நகராட்சியில் மேற்கொள்ள நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நிர்வாக அனுமதி அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.218.00 இலட்சம் போக கூடுதலாக ஆகும் தொகை ரூ.7.00 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து ஈடுசெய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.இ1/123/2018**

2. இந்நகரமன்ற தீர்மானம் எண்.45 நாள் : 28.03.2018–ல் கீழ்கண்ட 5 இடங்களில் ஆவின் பாலகங்கள் அமைக்க இடம் தேர்வு செய்து வாடகை அனுமதி கோரி கருத்துருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் வேலூர் மண்டல பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் கடிதம் ந.க.எண்.1805/2018/அ2 நாள் : 28.05.2018–ல் கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில், வருங்காலங்களில் தணிக்கை துறையினரால் வாடகை நிர்ணயம் செய்ததில் இழப்பீடுகள் ஏதும் ஏற்படும்பட்சத்தில் அத்தொகை கூடுதலாக வசூலிக்கப்படும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட வாடகை தொகையுடன் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் உரிய நடவடிக்கை எடுக்க தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்கண்ட ஆவின் நிறுவனம் அரசு சார்ந்த நிறுவனம் என்பதால், நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில், நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆவின் பாலகங்கள் கீழ்கண்ட இடங்களில் 10 x 10 என்ற அளவில் அமைப்பதற்கு திருத்திய மாத வாடகை, முன்வைப்புத்தொகை ரூ.10,000/– வீதம் மற்றும் 12 மாத வாடகை வைப்புத்தொகையை செலுத்த தொகை நிர்ணயம் செய்யலாம்.

| வ. எண் | தேர்வு செய்யப்பட்ட இடம் | ஏற்கனவே நகராட்சியால் நிர்ணயம் செய்த மாத வாடகை | மண்டல பொறியாளர், வேலூர் அவர்களால் திருத்தியமைக்கப்பட்ட மாத வாடகை | முன் வைப்புத் தொகை | 12 மாத கூடுதல் வைப்புத் தொகை (திருத்திய வாடகை அடிப்படையில்) |
|---|---|---|---|---|---|
| 1 | அரசு மருத்துவமனை தெரு | ரூ.1800.00 | ரூ.2,155.00 | ரூ.10,000.00 | ரூ.25,860.00 |
| 2 | ஆர்.எஸ்.ரோடு. (பாரத மாநில வங்கி அருகில்) | ரூ. 840.00 | ரூ.1,010.00 | ரூ.10,000.00 | ரூ.12,120.00 |
| 3 | புதிய பேருந்து நிலையம் | ரூ.1510.00 | ரூ.1,815.00 | ரூ.10,000.00 | ரூ.21,780.00 |
| 4 | பழைய பேருந்து நிலையம் | ரூ.1800.00 | ரூ.2,155.00 | ரூ.10,000.00 | ரூ.25,860.00 |
| 5 | தென் குளக்கரை (அண்ணா தெரு) | ரூ.1800.00 | ரூ.2,155.00 | ரூ.10,000.00 | ரூ.25,860.00 |

இந்நகராட்சி சட்ட விதிகளுக்கு உட்பட்டு ஆவின் பாலகங்கள் அமைத்துக்கொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.335/2018/எப்1)**

3. இந்நகரமன்ற தீர்மான எண்.94 நாள் : 08.06.2018–ல் 01.10.2018 முதல் ஏற்கனவே உள்ள தொழில்வரியில் 25% உயர்வு செய்தது தொடர்பான அறிவிப்பு தினசரி நாளிதழில் 14.06.2018 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி அறிவிப்பில் இந்த அறிவிப்பு வெளியிட்ட 30 நாட்களுக்கு பின்னர் தொழில்வரி உயர்வு செய்வது குறித்து இறுதி செய்யப்படும் என்றும் அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்ட 15 தினங்களுக்குள் ஆட்சேபனைகள், ஆலோசனைகள் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. இப்பொருள் தொடர்பாக குறிப்பிட்ட கால அவகாசத்தில் எந்தவிதமான ஆட்சேபனைகளும் வரப்பெறவில்லை என்பதனை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் உறுதி செய்யலாம். (ந.க.எண்.9326/2018/அ5)

**ஆணையாளர் / தனி அலுவலர்,**
**குடியாத்தம் நகராட்சி.**